பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

09 08 2026 SUNDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. அனைத்து துறைகளிலும் இந்தியாவை முன்னணி நாடாக உருவாக்கும் வகையில், மத்திய அரசு செயல்பட்டு வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. அமெரிக்காவுடனான நல்லுறவு வலுவடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. கடல்சார் வர்த்தகத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

4. காங்கோவின் Mombasa-வில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர்.

5. ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றது.

>>>>>>><<<<<<<

அனைத்து துறைகளிலும் இந்தியாவை முன்னணி நாடாக உருவாக்கும் வகையில், மத்திய அரசு செயல்பட்டு வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பிற நாடுகள் கருத்து தெரிவிப்பது ஏற்புடையதல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

அந்தமான் நிகோபார் தீவுகளில் பயணம் மேற்கொண்டுள்ள அவர், சுதந்திரப் போராட்ட தியாகிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்த செல்லுலார் சிறையை பார்வையிட்டார்.

நாட்டின் சுதந்திரத்திற்காக பல்வேறு இன்னல்களை எதிர்கொண்ட சுதந்திரப் போராட்ட தியாகிகளின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அஞ்சலி செலுத்தினார்.

>>>>>>><<<<<<<

அமெரிக்காவுடனான நல்லுறவு வலுவடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அமெரிக்க துணை அதிபர் திரு. J.D. Vance, தம்முடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியபோது இருநாடுகளுடனான ஒத்துழைப்பு குறித்து விரிவாக விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தகம், பாதுகாப்பு, தொழில்நுட்பம், எரிசக்தி பாதுகாப்பு, அரியவகை கனிமங்கள் உள்ளிட்ட முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் இருநாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவது குறித்தும் ஆலோசித்ததாக அவர் கூறியுள்ளார்.

இருநாடுகளுக்கும் பயனளிக்கும் வகையிலான பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் தங்களது கருத்துக்களை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

கடல்சார் வர்த்தகத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், கடல்சார் நிர்வாகத்தை நவீனமயமாக்கும் வகையில் E-Samutra இணையதளம் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

கப்பல் கட்டுமானம், கடல்சார் வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா வளர்ச்சி கண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்திய மாலுமிகள் அச்சமின்றி பாதுகாப்பாக பணியாற்றுவதை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<<

இல்லந்தோறும் தேசியக் கொடி இயக்கம் இன்று தொடங்குகிறது.

நாட்டின் கலாச்சாரம், தேசிய ஒருமைப்பாடு, நாட்டுப்பற்றை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது.

இம்மாதம் 17ஆம் தேதிவரை நடைபெறும் இந்த இயக்கத்தில், மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள 200க்கும் அதிகமான இந்திய தூதரகங்களிலும் இந்த தேசியக்கொடி இயக்கம் மேற்கொள்ளப்படுகிறது.

>>>>>>><<<<<<<<

உத்ராகண்ட், சத்திஷ்கர் மாநிலங்களில் ஒரு சில இடங்களில் இன்று, கன முதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹரியானா, ஹிமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், உத்தரபிரதேசதம், ராஜஸ்தான், ஜார்க்கண்ட், மத்தியப்பிரதேசம் மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

கர்நாடகா, தமிழ்நாடு, கேரளம் மற்றும் புதுச்சேரியில் இடிமின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அஸ்ஸாமில் கனமழை காரணமாக, ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மழை வெள்ளம் தொடர்பான சம்பவங்களில் இதுவரை 99 பேர் உயிரிழந்துள்ளதாகவும், ஒரு லட்சத்து 47 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

சோனித்பூர், நகோஆன், கொலாட், சிவசாகர் உள்ளிட்ட 12 மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

>>>>>>><<<<<<<

காங்கோவின் Mombasa-வில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர்.

இப்பகுதியில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது, கிராமப்புற மக்கள் போதிய ஒத்துழைப்பு அளிக்காததன்

காரணமாக, இந்த தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

>>>>>>><<<<<<<

இந்தியா - கோஸ்ட்டாரிக்கா இடையேயான இருதரப்பு உறவுகள் மேலும் வலுவடையும் என்று வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிடம்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இருநாடுகளும் பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக கூறியுள்ளார்.

அந்நாட்டு அதிபர் திரு. Alassane Quattara-வுடன் நடத்திய பேச்சுகள் ஆக்கபூர்வமாக இருந்தது என்று திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

அமெரிக்காவுடனான சண்டை நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்த ஈரான் முடிவு செய்துள்ளதாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் திரு. Pezeshkian தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அந்நாட்டு அதிகாரப்பூர்வ இணையதளம் வாயிலாக வெளியிடப்பட்டுள்ள செய்தியில், நாட்டு மக்களின் நலன் கருதி இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சண்டை நிறுத்த ஒப்பந்த த்தில் உள்ள ஷரத்துக்களை நிறைவேற்றும் வகையில் அமெரிக்கா செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

முன்னதாக ஈரானுடனான மோதல் விரைவில் முடிவுக்கு வரும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

>>>>>>><<<<<<<

தாய்லாந்தின் Nonthaburi மாகாணத்தில் உள்ள பள்ளி ஒன்றில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9ஆக அதிகரித்துள்ளது.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அந்நாட்டு பொதுசுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த சம்பவத்தில் காயமடைந்த 14 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொதுஇடங்களில் துப்பாக்கி போன்ற ஆயுதங்களை பயன்படுத்த கடும் கட்டுப்பாடுகள் விரைவில் அமல்படுத்தப்படும் என்று அந்நாட்டு பிரதமர் திரு. Anutin Charnvirakul அறிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

அமெரிக்காவில் வேலைவாய்ப்பை இழந்த வெளிநாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் புதிய வேலைவாய்ப்பை பெறும் வகையில், 60 நாட்கள் அந்நாட்டில் தங்கியிருக்க அனுமதி வழங்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

எனினும் இதுதொடர்பான விதிமுறைகள் குறித்த முழு விபரங்கள் வெளியிடப்படவில்லை.

>>>>>>><<<<<<<

கொலம்பியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ காரணமாக அந்நாட்டில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

காட்டு தீயால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் 20 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

>>>>>>><<<<<<<

ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றது.

உஸ்பெகிஸ்தானின் Tashkent-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 60 கிலோ எடைப் பிரிவில், இந்தியாவின் Tomochou Meetei தங்கப்பதக்கத்தையும், Gurunaidu Sanapathi வெள்ளிப் பதக்கமும் வென்றனர்.

>>>>>>><<<<<<<

உலக இளையோர் Bridge சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Sagnik Roy - Sayantan Kushari இணை சாம்பியன் பட்டம் வென்றது.

>>>>>>><<<<<<<

China-வின் Hefei நகரில் நடைபெற்ற இப்போட்டியில், இந்த இணை 377.67 புள்ளிகள் பெற்று சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

>>>>>>><<<<<<<

கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின், மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில், இந்தியாவின் Ashmita Chaliha, சீனாவின் Q Han-ஐ எதிர்கொள்கிறார்.

தென்கொரியாவில் Asan நகரில் இப்போட்டி, இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

>>>>>>><<<<<<<

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் மதுரை - கோவை அணியையும், திருச்சி – சேலம் அணியையும் வென்றன.

இன்று நடைபெறும் ஆட்டங்களில், சேப்பாக் அணி - திண்டுக்கல் அணியையும், நெல்லை அணி - திருப்பூர் அணியையும் எதிர்கொள்கிறது.

>>>>>>><<<<<<<

தமிழ்நாடு ஹாக்கி லீக் போட்டி, சென்னையில் இன்று தொடங்குகிறது.

இம்மாதம் 12-ம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில், தெற்கு ரயில்வே, ஐசிஎஃப், இந்தியன் வங்கி உள்ளிட்ட 12 அணிகள் பங்கேற்கின்றன.

>>>>>>><<<<<<<

பெங்களுருவில் நடைபெற்ற மலேசியாவிற்கு எதிரான 21 வயதிற்குட்பட்டோருக்கான இரண்டாவது ஹாக்கி போட்டியில் இந்தியா 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில், இந்தியா இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று முன்னிலையில் உள்ளது.

>>>>>>>END<<<<<<<<